**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பண்பாடு என்றால் என்ன?
2. கூட்டு வடிவங்களினால் ஏற்படும் பண்பாடு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. பன்முகப் பண்பாடு என்பது யாது?
4. சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் யார்?
5. இரட்டைக் காப்பியங்கள் எவை?
6. செங்கணான் கட்டிய கோயில்கள் எத்தனை?
7. நீதிநெறிவிளக்கத்தின் ஆசிரியர் யார்?
8. பௌத்த சமயம் யாரால் உருவாக்கப் பெற்றது?

9. இசுலாம் மதத்திற்குரிய கடமைகள் யாவை?
10. திரு.வி.க. நடத்திய பத்திரிக்கைகள் யாவை?
11. சிற்றிலக்கியம் எத்தனை வகைப்படும்?
12. பழந்தமிழர் முந்நீர் என்று எதைக் குறித்தனர்?
13. பண்டமாற்று முறை என்றால் என்ன?
14. படைவீரர் பாதுகாப்பிற்கு தங்கிய ஊர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
15. தளி என்பதன் பொருள் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. தகுதிவழக்கின் கூறுகள் குறித்து விளக்கி வரைக.
2. தமிழகத்தின் நிலம் சார்ந்த வாழ்வு முறை குறித்து எழுதுக.
3. இசைக்கருவிகளின் வகைகளை விளக்குக.
4. சமணரின் பண்பாட்டு நெறிகளை எழுதுக.
5. நாயக்கர் ஆட்சியின் நிர்வாக அமைப்பை விவரிக்க.
6. பத்திரிக்கை வளர்த்த பண்பாடு குறித்தெழுதுக.
7. தமிழகப் பண்பாட்டில் இன்று குறைந்து வரும் பண்புகள் எவையெவை?
8. கல்வெட்டின் பகுதிகள் குறித்து விவரிக்க.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பண்பாட்டில் கூட்டுவடிவங்களின் தனிக்கூறுகள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகை நூல்களின் வழி அறியலாகும் பண்பாட்டு விளக்கங்களை எழுதுக.

2. (அ) சைவநெறி வளர்த்த பண்புகள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இசுலாமும், கிறித்தவமும் தமிழரிடையே ஏற்படுத்திய தாக்கத்தை எழுதுக.

3. (அ) தமிழர் பண்பாட்டில் மாற்றம் விளைவித்த காரணங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கல்வெட்டின் வழி அறியலாகும் பலவகை வரிகள் குறித்து விவரிக்க.